ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2090/14 - 2018 සැප්තැම්බර් 25 වැනි අඟහරුවාදා - 2018.09.25
*2090/14 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சு.

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, செத்தெம்பர் 20.

**அட்டவணை**

மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1999 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதியன்று 1099/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் இறுதியாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிய 1791/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள் அவ்வட்டவணையிலிருந்து பின்வரும் பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

PG4243 - 202 (2018/09)
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**தொழிலாளர் வகுப்பு**

1. **தேர்ச்சியுடையோர் :**
பிரிவுத் தலைவர்கள், நானாவித இயந்திர இயக்குநர்கள், வடிவமைப்போர், சார்ஜ் ஹேன்டர்ஸ் (Charge handers), போறணை இயந்திர இயக்குநர்கள், அடுப்பு (Oven) இயக்குநர், சிரேஷ்ட மின்தூக்கி இயக்குநர், அச்சுருவங்கள் அமைப்போர், ஆராய்ச்சி உதவியாளர்கள், சிற்பங்களை அமைப்போர், படவரைஞர்கள், செவ்வை பார்ப்போர், மின்னுட் பவியலாளர்.

2. **ஓரளவு தேர்ச்சியுள்ளோர்**

உதவி அச்சுருவங்களை அமைப்போர், நிறம் தீட்டுவோர், (ஸ்பிறே பண்ணுவோர், டிப்பர்ஸ்), தெரிவு செய்வோர், கனிஷ்ட மின்தூக்கி இயக்குநர், மெருகூட்டுநர், பொதி செய்வோர், பொருட்களை சுத்தஞ் செய்வோர், ஸ்ரிக்கர்ஸ் ஒட்டுவோர், சவல் லோடர் (shovel loader) இயக்குநர், உதவி இயந்திர இயக்குநர், மின்சார உற்பத்தி இயந்திர இயக்குநர், உதவி அடுப்பு (Oven) இயக்குநர்.

3. **தேர்ச்சியற்றோர்**
சுத்திகரிப்போர், உதவியாளர்கள், சாதாரண வேலையாட்கள், தோட்ட வேலையாளர்கள் இவற்றையொத்த ஏனைய சேவைகளில் ஈடுபட்டுள்ளோர்.

4. **பயிலுநர்கள்**
இரண்டு ஆண்டுக்கால பயிற்சி வரையறையின் கீழ் நானாவித துறைகளிலும் பயிற்சி பெறுவோர்.

**மாதமொன்றுக்கு வழங்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு**

| சேவை ஆண்டு | தேர்ச்சியுள்ளோர் ரூ. ச. | ஓரளவு தேர்ச்சித் திறனுள்ளோர் ரூ. ச. | தேர்ச்சித்திறன் அற்றோர் ரூ. ச. | பயிலுனர் ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 12,627.00 | 11,769.00 | 11,000.00 | 6,693.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,777.00 | 11,894.00 | 11,100.00 | 6,793.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,927.00 | 12,019.00 | 11,200.00 | |
| 4 ஆம் ஆண்டு | 13,077.00 | 12,144.00 | 11,300.00 | |
| 5 ஆம் ஆண்டு | 13,227.00 | 12,269.00 | 11,400.00 | |

10- 286/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பனிக்கட்டி, வளி ஊட்டப்பட்ட நீர் வகை, பழரசம் மற்றும் ஜாம், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

பனிக்கட்டி, வளி ஊட்டப்பட்ட நீர் வகை, பழரசம் மற்றும் ஜாம், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சு.

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, செத்தெம்பர் 20.

**அட்டவணை**

பனிக்கட்டி, வளியூட்டப்பட்டநீர்வகை, பழரசம், ஜாம், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1963 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் தேதிய 13535 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2013 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆந் திகதிய 1823/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள், அவ்வட்டவணையின் 1I ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பாகம்** II

நிரல் I

**வேலையாளர்களின் வகுப்பு**

**தரம்** I

*பிரதான ஐஸ்கிரீம், பழரசம், ஜாம் தயாரிப்போர் (இயற்கையானதும் செயற்கையானதுமான சாறினை இட்டு) கங்காணிமார், தலைமைப் பாணி தயாரிப்போர், நீர் வடித்தற் பொறித் தொகுதி இயக்குநர்கள், தகரப்பட்டி ஆக்குநர்கள், தச்சர், நிரப்புநர் (தன்னியக்க), செவ்வை பார்ப்போர்.*

**தரம்** II

*உதவி ஐஸ்கிரீம்/பழரசம், ஜாம் தயாரிப்போர்( இயற்கையானதும் செயற்கையானதுமான சாறினை இட்டு) இத் தொழிலுக்குரிய பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள வேறு தொழிலாளர்கள், தகரப்புட்டி பழுதுபார்ப்போர், கார்பன்டை ஒக்சைட் வாயுக் கட்டுப்பாட்டாளர், உதவி பாணி தயாரிப்போர், பணியாளர்கள், மூடியிடுநர், போத்தல் துப்புரவு பரிசோதகர்கள், கார்பனேட்டர் இயக்குநர்கள், உற்பத்தி எண்ணுவோர், நிரப்புநர் (கையால்), கட்டுத் துண்டிடுவோர்(தன்னியக்க), போத்தல் கழுவுநர், கனிப்பொருள் அல்லது வளியூட்டப்பட்ட நீர் வகை உற்பத்தியின் தன்னியக்க எந்திரங்களில் ஈடுபட்டுள்ள வேறெவரேனும் வேலையாளர்கள், பனிக்கட்டி அறுப்போர்.*

**தரம்** III

*ஐஸ்கிரீம், பழரசம், ஜாம் புட்டிகளில் நிரப்புநர், ஐஸ்கிரீம் , பழரசம், ஜாம் களஞ்சியப்படுத்துநர், பனிக்கட்டி, களஞ்சியப்படுத்துநர் பனிக்கட்டி பொதியிடுவோர், பனிக்கட்டி ஏற்றுநர், பாணியறைத் தொழிலாளர்கள், போத்தல் பொதி அவிழ்ப்போர், போத்தல் பிரித்து வைப்போர் அல்லது சுத்திகரிப்போர், போத்தல் கழுவி ஏற்றுவோர், பெட்டி நிரப்புநர், போத்தல் பொதியிடுவோர், சுத்திகரிப்போர் அல்லது பெருக்குவோர், போத்தல் கையால் சுத்திகரிப்போர், பெட்டி காவுநர் அல்லது அடுக்குநர், பண்டகசாலைத் தொழிலாளர்கள், கட்டுத்துண்டிடுவோர் (கையால்), வாகனத்தில் ஏற்றுவோர்.*

**ஒரு மாதத்திற்கு கொடுக்க வேண்டிய ஆகக் குறைந்த சம்பள வீதம்**

| *ஊழிய ஆண்டு* | *வகுப்பு 1* | *வகுப்பு 11* | *வகுப்பு 11* |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 14,125.00 | 13,560.00 | 13,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 14,275.00 | 13,685.00 | 13,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 14,425.00 | 13,810.00 | 13,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 14,575.00 | 13,935.00 | 13,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 14.725.00 | 14,060.00 | 13,400.00 |
| 6 ஆம் ஆண்டு | 14,875.00 | 14,185.00 | 13,500.00 |
| 7 ஆம் ஆண்டு | 15,025.00 | 14,310.00 | 13,600.00 |
| 8 ஆம் ஆண்டு | 15,175.00 | 14,435.00 | 13,700.00 |
| 9 ஆம் ஆண்டு | 15,325.00 | 14,560.00 | 13,800.00 |
| 10 ஆம் ஆண்டு | 15,475.00 | 14,685.00 | 13,900.00 |
| 11 ஆம் ஆண்டு | 15,625.00 | 14,810.00 | 14,000.00 |
| 12 ஆம் ஆண்டு | 15,775.00 | 14,935.00 | 14,100.00 |
| 13 ஆம் ஆண்டு | 15,925.00 | 15,060.00 | 14,200.00 |
| 14 ஆம் ஆண்டு | 16,075.00 | 15,185.00 | 14,300.00 |
| 15 ஆம் ஆண்டு | 16,225.00 | 15,310.00 | 14,400.00 |
| 16 ஆம் ஆண்டு | 16,375.00 | 15,435.00 | 14,500.00 |
| 17 ஆம் ஆண்டு | 16,525.00 | 15,560.00 | 14,600.00 |
| 18 ஆம் ஆண்டு | 16,675.00 | 15,685.00 | 14,700.00 |
| 19 ஆம் ஆண்டு | 16,825.00 | 15,810.00 | 14,800.00 |
| 20 ஆம் ஆண்டு | 16,975.00 | 15,935.00 | 14,900.00 |
| 21 ஆம் ஆண்டு | 17,125.00 | 16,060.00 | 15,000.00 |
| 22 ஆம் ஆண்டு | 17,275.00 | 16,185.00 | 15,100.00 |
| 23 ஆம் ஆண்டு | 17,425.00 | 16,310.00 | 15,200.00 |
| 24 ஆம் ஆண்டு | 17,575.00 | 16,435.00 | 15,300.00 |
| 25 ஆம் ஆண்டு | 17,725.00 | 16,560.00 | 15,400.00 |

10- 286/2

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபை**

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென இக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05.
2018, செத்தெம்பர் 20.

**அட்டவணை**

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும் 1974 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதிய 104 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதிய 1800/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்துக்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பாகம் - II**

வேலையாளரின் வகுப்பு

**தரம் - I**
தலைமைத் தாதி, அப்போதிக்கரிமார்

**தரம் - II**
வாகடகர், தாதிச் சகோதரி, ஆய்வுகூட தொழில்நுட்பவலர், கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர், கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்

**தரம் - III**
(அ) தாதிமார், மருத்துவிச்சிமார், களஞ்சியக்காப்பாளர்
(ஆ) பயிற்சி பெறும் தாதிமார் : பயிற்சியின் 1 ஆம் ஆண்டு
பயிற்சியின் 2 ஆம் ஆண்டு
பயிற்சியின் 3 ஆம் ஆண்டு

**தரம் - IV**
எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், வரவேற்பாளர்கள், தொலைபன்னி இயக்குநர்கள், காசாளர்கள்

**தரம் - V**
கவனிப்பாளர்கள், மருந்தகர்கள், அறுவை மருத்துவ மருந்துகட்டுநர்கள், உணவு மேலாளர், மேற்பார்வையாளர்கள், வாட்டு எழுதுவினைஞர்கள், உணவு பட்டியல் எழுதுவினைஞர்கள்

**தரம் - VI**
ஓடலிமார், பியோன்மார், சமையற்காரர்கள், காவலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள்

**தரம்** - VII

துணியறைக் கவனிப்பாளர்கள், தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், பெருக்குநர்கள், சாப்பாட்டறைப் பையன்கள்

'ஆண்டு' என்பது எவரேனும் பயிற்சி பெறும் தாதி தொடர்பாக பன்னிரண்டு மாதங்கள் தொழிலில் ஈடுபடுத்தல் எனக் கொண்ட ஊழியமென கருதப்படல் வேண்டும்.

**மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | தரம் I ரூபா சதம் | தரம் II ரூபா சதம் | தரம் III ரூபா சதம் | தரம் IV ரூபா சதம் | தரம் V ரூபா சதம் | தரம் VI ரூபா சதம் | தரம் VII ரூபா சதம் | தரம் VIII ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 14,975.00 | 14,652.00 | 14,110.00 | 8,870.00 | 13,674.00 | 13,239.00 | 12,810.00 | 12,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 15,225.00 | 14,877.00 | 14,310.00 | 9,020.00 | 13,849.00 | 13,389.00 | 12,935.00 | 12,600.00 |
| 3 ஆம் ஆண்டு | 15,475.00 | 15,102.00 | 14,510.00 | 9,170.00 | 14,024.00 | 13,539.00 | 13,060.00 | 12,700.00 |
| 4 ஆம் ஆண்டு | 15,725.00 | 15,327.00 | 14,710.00 | | 14,199.00 | 13,689.00 | 13,185.00 | 12,800.00 |
| 5 ஆம் ஆண்டு | 15,975.00 | 15,552.00 | 14,910.00 | | 14,374.00 | 13,839.00 | 13,310.00 | 12,900.00 |
| 6 ஆம் ஆண்டு | 16,225.00 | 15,777.00 | 15.110.00 | | 14,549.00 | 13,989.00 | 13,435.00 | 13,000.00 |
| 7 ஆம் ஆண்டு | 16,475.00 | 16,002.00 | 15,310.00 | | 14,724.00 | 14,130.00 | 13,560.00 | 13,100.00 |
| 8 ஆம் ஆண்டு | 16,725.00 | 16,277.00 | 15,510.00 | | 14,899.00 | 14,289.00 | 13,685.00 | 13,200.00 |
| 9 ஆம் ஆண்டு | 16,975.00 | 16,452.00 | 15,710.00 | | 15,074.00 | 14,439.00 | 13,810.00 | 13,300.00 |
| 10 ஆம் ஆண்டு | 17,225.00 | 16,677.00 | 15,910.00 | | 15,249.00 | 14,589.00 | 13,935.00 | 13,400.00 |

10-286/3

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**திரைப்படத் தொழில்**

திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென இக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05.
2018, செத்தெம்பர் 20.

**அட்டவணை**

திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் செய்யப்பட்டவையும் 1949 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதிய 9961 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் I ஆம் பாகத்துக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி** - I

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் சேவையாளர் வகுப்புக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நேர வேலைக்கான ஆகக்குறைந்த மாதாந்தச் சம்பள அளவு முறையே மாநகரசபை எல்லைக்குட்பட்ட திரைப்படக் கூடங்கள் மாநகர சபை எல்லைக்குட்படாத திரைப்படக்கூடங்களுக்குரிய வகையில் I ஆம் மற்றும் II ஆம் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**ஊழியர் வகுப்பு**

(அ) எழுதுவினைஞர் தரமல்லாத

**தேர்ச்சியற்றோர்**

விளம்பர வண்டியிழுப்போர், விளம்பர அல்லது சுவரொட்டிப் பையன், குளியல் அறைப் பையன், கார் அல்லது சைக்கிள் நிறுத்திட ஏவலாள், சொக்களேற் பையன், துப்பரவு செய்பவர், உடுதுணியறைப் பையன், மலசலகூடத் தொழிலாளி, தோட்டத் தொழிலாளி, வாசல் காப்போன், மண்டப பையன், சேவகர், சான்ட்விச் பையன், மென்பானம் வைத்திருப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளி இருக்கை காட்டும் பெண் பணியாளர், உணவு விடுதி மேசைப் பணியாளர், காவலாளர் (பகல்), காவலாளர் (இரவு).

**அரை தேர்ச்சியுள்ளோர்**

மதுபானச்சாலை உதவிப் பொறுப்பாளர், உதவி எஞ்சின் ஓட்டுநர், சரிபார்ப்பவர், சமையற்காரர் தரம் II(கீழ்நிலை), மீளச் சுற்றுபவர், தொலைபேசி இயக்கநர், மூன்றாவது உதவி இயக்குநர்.

**தேர்ச்சியுள்ளோர் தரம்** - II

மதுபானச்சாலை உதவிப் பொறுப்பாளர், தச்சர், சமையற்காரர் தரம் I உயர் நிலை, மின்சாரத் தொழிலாளர், தரம் II திரைப்படச்சுருள் பழுது பார்ப்பவர், தரம் II கட்புல, செவிப்புல இணைப்பு எந்திர இயக்குநர், இரண்டாவது உதவி இயக்குநர், மேற்பார்வையாளர் அல்லது தலைமை சரிபார்ப்போர், கூடாரத் தலைவர், மின்கம்பியாளர், தீயணைப்பாளர்.

**தேர்ச்சியுள்ளோர் தரம்** - I

ஆமேச்சர் சுற்றுபவர், மின்சாரத் தொழிலாளர் தரம் I, எஞ்சின் ஓட்டுநர், திரைப்படச் சுருள் அறை பழுதுபார்ப்பவர் தரம் I, தலைமை இயக்குநர், கூடாரம் கட்டுபவர்.

(ஆ) எழுதுவினைஞர்

**தரம்** - III

விளம்பர எழுதுவினைஞர், உதவிக் காசாளர், எழுது வினைஞர் (அனுப்புதல்), நீக்கற் பொறுப்பு எழுது வினைஞர், சீட்டு முற்பதிவு எழுதுவினைஞர், சீட்டு எழுதுவினைஞர்.

**தரம்** - II

விளம்பர முகாமையாளர், காசாளர் எழுதுவினைஞர், எழுதுவினைஞர் (கணக்குகளும் பொதுவும்), தட்டெழுத்தாளர், சரக்கு மேசை எழுதுவினைஞர், களஞ்சியப் பொருட்காப்பாளர், கணக்குப் பதிவாளர்.

**தரம்** - 1

தலைமை எழுதுவினைஞர்

**ஏனையோர்**

முகாமையாளர்

உதவி முகாமையாளர்

**அட்டவணை** I

மாநகர எல்லைக்குள்

| வேலையாளர்களின் வகுப்பு (ஆ) எழுதுவினைஞர் தரமல்லாத | மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதங்கள் ஊழிய ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 ஆம் ஆண்டு ரூபா சதம் | 2 ஆம் ஆண்டு ரூபா சதம் | 3 ஆம் ஆண்டு ரூபா சதம் | 4 ஆம் ஆண்டு ரூபா சதம் | 5 ஆம் ஆண்டு ரூபா சதம் |
| **தேர்ச்சியற்றோர்** | 12,000.00 | 12,100.00 | 12,200.00 | 12,300.00 | 12,400.00 |
| **ஓரளவு தேர்ச்சி உள்ளோர்** | 12,447.00 | 12,572.00 | 12,697.00 | 12,822.00 | 12,947.00 |
| **தேர்ச்சியுள்ளோர்** தரம் II | 13,149.00 | 13,299.00 | 13,449.00 | 13,599.00 | 13,749.00 |
| **தேர்ச்சியுள்ளோர்** தரம் I | 14,344.00 | 14,519.00 | 14,694.00 | 14,869.00 | 15,044.00 |
| (ஆ) **எழுதுவினைஞர்** | | | | | |
| தரம் III | 12,447.00 | 12,572.00 | 12,697.00 | 12,822.00 | 12,947.00 |
| தரம் II | 13,108.00 | 13,258.00 | 13,408.00 | 13,558.00 | 13,708.00 |
| தரம் I | 13,939.00 | 14,114.00 | 14,289.00 | 14,464.00 | 14,639.00 |
| **பிரதம எழுதுவினைஞர்** | | | | | |
| **ஏனையோர்** | | | | | |
| முகாமையாளர் | 14,836.00 | 15,011.00 | 15,186.00 | 15,361.00 | 15,536.00 |
| உதவி முகாமையாளர் | 12,960.00 | 13,110.00 | 13,260.00 | 13,410.00 | 13,560.00 |

**அட்டவணை II**

மாநகர எல்லைக்கு வெளியே

| வேலையாளர்களின் வகுப்பு (ஆ) எழுதுவினைஞர் தரமல்லாத | மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதங்கள் ஊழிய ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 ஆம் ஆண்டு ரூபா சதம் | 2 ஆம் ஆண்டு ரூபா சதம் | 3 ஆம் ஆண்டு ரூபா சதம் | 4 ஆம் ஆண்டு ரூபா சதம் | 5 ஆம் ஆண்டு ரூபா சதம் |
| **தேர்ச்சியற்றோர்** | 12,048.00 | 12,148.00 | 12,248.00 | 12,348.00 | 12,448.00 |
| **ஓரளவு தேர்ச்சி உள்ளோர்** | 12,548.00 | 12,673.00 | 12,798.00 | 12,923.00 | 13,048.00 |
| **தேர்ச்சியுள்ளோர்** தரம் II | 13,243.00 | 13,393.00 | 13,543.00 | 13,693.00 | 13,843.00 |
| **தேர்ச்சியுள்ளோர்** தரம் I | 14,438.00 | 14,613.00 | 14,788.00 | 14,963.00 | 15,138.00 |
| (ஆ) **எழுதுவினைஞர்** | | | | | |
| தரம் III | 12,548.00 | 12,673.00 | 12,798.00 | 12,923.00 | 13,048.00 |
| தரம் II | 12,548.00 | 12,698.00 | 12,848.00 | 12,998.00 | 13,148.00 |
| தரம் I | 13,682.00 | 13,857.00 | 14,032.00 | 14,207.00 | 14,382.00 |
| **பிரதம எழுதுவினைஞர் ஏனையோர்** | | | | | |
| முகாமையாளர் | 14,586.00 | 14,761.00 | 14,936.00 | 15,111.00 | 15,286.00 |
| உதவி முகாமையாளர் | 12,656.00 | 12,806.00 | 12,956.00 | 13,106.00 | 13,256.00 |

10-286/4

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபை

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல்வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு.

கொழும்பு 05.
2018, செத்தெம்பர் 20.

**அட்டவணை**

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 99/71 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 1838/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான முடிபுகள், பின்வருமாறு மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

(1) அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் வேலையாட்களுக்கு ஏற்புடையதான துண்டு வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளம் பின் வருமாறமைதல் வேண்டும்:

| | நடைமுறை | | வீதம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 1 | பெருந் தோட்டப் பயிர்களை வளர்ப்பதிலும் பேணுவதிலும், தேங்காய்களைப் பறித்தல் | - | 1000 மரங்களுக்கு | 2391.00 |
| 2 | கொப்பறாவை உற்பத்தி செய்வதில் தேங்காய்களை உரித்தல், உடைத்தல், கொப்பறா பதனிடலும், வேறாக்கலும் | - | 1000 தேங்காய்களுக்கு | 700.00 |

**பகுதி III**

(2) நடைமுறை:

(அ) தெங்குப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினை வளர்த்தலும், பேணுதலும்,
(ஆ) கொப்பறாவினை உற்பத்தி செய்தல்.

மேற்படி நடைமுறைக்கேற்ப நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறமைய வேண்டும்.

| | ரூபா சதம் |
|---|---|
| தொழிலாளி ஒருவருக்கு (ஆண்/பெண்) - நாளொன்றிற்கு | 600.00 |

சாதாரண வேலை நாளொன்றில் அத்தகைய வேலைக்காக வழங்குவதற்குக் குறிக்கப்பட்ட ஆகக்குறைத்த சம்பள வீதத்தில் ஒன்றரை மடங்கு, ஞாயிற்றுக்கிழமையில் கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டுள்ள எந்தத் தொழிலாளிக்காயினும் இப் பகுதியில் குறிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு மாறுபடாத வகையில் வழங்கப்படுதல் வேண்டும்.

பகுதி III "அ"

(3)

(அ) நடத்துநர் ஒருவரின் வேலைக்கு
(ஆ) காவலாளி ஒருவரின் வேலைக்கு

உரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்:

| ஏக்கர் அளவு | | | காவலாளி ரூபா சதம் | நடத்துனர் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 1 | பரப்பளவில் 10 ஏக்கருக்குக் குறையாதஆனால் 25 ஏக்கருக்குக் குறைந்த தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு | - | 12520.00 | ஏற்புடையதன்று |
| 2 | பரப்பளவில் 25 ஏக்கருக்குக் குறையாதஆனால் 50 ஏக்கருக்குக் குறைந்த தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு | - | 13064.00 | 13426.00 |
| 3 | பரப்பளவில் 50 ஏக்கருக்குக் கூடிய தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு | - | 14971.00 | 15332.00 |

10 - 286/5

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபை

இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, செத்தெம்பர் 20.

**அட்டவணை**

இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1945 - ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டனவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவையும், 2012 - ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19-ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு கடைசியாக வேறுபடுத்தப்பட்டனவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி** II

மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்

**தொழிலாளர் வகுப்பு**

**தரம்** II

வெட்டுதல், பூசனம் பிடித்த இறப்பரைக் கழுவுதலும் அதற்குப் புகையிடுதல், அமர்த்து பொறிகளுக்கும் நிறுக்கும் எந்திரங்களுக்கும் களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கும் தள்ளுதல் உட்பட பொது வேலை, சிப்பமாக்குவதற்கு இறப்பரை ஒன்று சேர்த்தல், சுற்றுதல், அமர்த்துதல், வளையமிடுதல்,

கம்பிகட்டுதல், கடைச்சணற் சாக்கு உறைகள் வெட்டுதல், வர்ணப்பசை பூசுதல், காயவைத்தல் ஒன்றுசேர்த்தல், அடையாளமிடுதல், விசேடமாகப் பொறியிடுதற்கு கடைச்சணற் சாக்கைப் பரவிவிடுதல், சிப்பங்களை கடைச்சணற் சாக்கினால் மூடுதல், வைத்தலும், சிப்பங்களை, ஆயத்தஞ் செய்தலும் களஞ்சியங்களையும் வடிகால்களையும் சுத்திகரித்தலும் கூட்டுதலும்.

**இடைநிலைத் தரம்**

நிறுத்தல், தரம் பிரித்தல், வகைப்படுத்தல் தொழிலிலீடுபடுத்தப்பட்டுள்ள அமர்த்துபொறி இயக்குநரின் வேலை.

**தரம் I**

சிப்பங்களை ஏற்றுதல், தரையிறக்குதல் அத்துடன் கொண்டுசெல்லல், அடுக்குதல்,

காவலாளர்கள்.

| ஊழிய ஆண்டு | தரம் II<br>ரூ. ச. | இடை நிலைத்தரம்<br>ரூ. ச. | தரம் I<br>ரூ. ச. | காவலாளர்கள்<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 13,000.00 | 13,572.00 | 14,137.00 | 13,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 13,100.00 | 13,697.00 | 14,287.00 | 13,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 13,200.00 | 13,882.00 | 14,437.00 | 13,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 13,300.00 | 13,947.00 | 14,587.00 | 13,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 13,400.00 | 14,072.00 | 14,737.00 | 13,400.00 |
| 6 ஆம் ஆண்டு | 13,500.00 | 14,197.00 | 14,887.00 | 13,500.00 |
| 7 ஆம் ஆண்டு | 13,600.00 | 14,322.00 | 15,037.00 | 13,600.00 |
| 8 ஆம் ஆண்டு | 13,700.00 | 14,447.00 | 15,187.00 | 13,700.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,800.00 | 14,572.00 | 15,337.00 | 13,800.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,900.00 | 14,697.00 | 15,487.00 | 13,900.00 |
| 11 ஆம் ஆண்டு | 14,000.00 | 14,822.00 | 15,637.00 | 14,000.00 |
| 12 ஆம் ஆண்டு | 14,100.00 | 14,947.00 | 15,787.00 | 14,100.00 |
| 13 ஆம் ஆண்டு | 14,200.00 | 15,072.00 | 15,937.00 | 14,200.00 |
| 14 ஆம் ஆண்டு | 14,300.00 | 15,197.00 | 16,087.00 | 14,300.00 |
| 15 ஆம் ஆண்டு | 14,400.00 | 15,322.00 | 16,237.00 | 14,400.00 |

10 - 286/6

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தி (சொக்கலேற்று உற்பத்தியுட்பட) தொழில்

விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தித் (சொக்கலேற்று உற்பத்தியுட்பட) தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ்ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05.
2018, செத்தெம்பர் 12.

**அட்டவணை**

விசுக்கோத்து, இனிப்பு வகை உற்பத்தி (சொக்லேற்று உற்பத்தி) த் தொழிலுக்கான சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1968 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதிய 14806 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டனவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2013 - ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்ட தீர்மானங்கள், பின்வரும் புதிய பகுதியினை அவ்வட்டவணையின் பாகம் II ற்கு பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி** II

விசுக்கோத்து, இனிப்பு வகை உற்பத்தி (சொக்லேற்று உற்பத்தி) த் தொழிலில் ஈடுபட்டுள்ள கீழ்காட்டப்பட்டுள்ள வேலையாளர் வகுப்புக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நேரவேலைக்காக கொடுக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த மாதாந்த சம்பள அளவுகள் முறையே இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் இயந்திர சக்தியின்றி இயங்கும் தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கும் உரிய வகையில் 1 ஆம் மற்றும் 11 ஆம் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**“அ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்)**

(அ) **விசுக்கோத்து உற்பத்தி**:
சேர்ப்புத் திரவியங்களைக் கொதிக்க வைத்தல், “வெப்ப மேசைகளுக்கும்” அவற்றிலிருந்தும் “பாகுவை” அகற்றுதல் தொடர்பான வேலை, “சூடாற்று மேசைகளுக்கும்” அவற்றிலிருக்கும் “ பாகுவை” அகற்றுதல் தொடர்பான வேலை, “பாகுஊட்டு” தொடர்பான செய்கைகள், “பாகு வைத்” தடங்களிற் கொட்டுதல் தொடர்பான வேலை, “வெட்டிச் சுற்றும் பொறி” தொடர்பான வேலை, ” துண்டு செய்பொறி” தொடர்பான செய்கைகள், “இரவையாக்கு பொறி” தொடர்பான செய்கைகள், சாரம், சீனி, சாயப் பொருள் ஆகியன சேர்த்தல் உட்பட அசைத்தாச்சிகள் தொடர்பான செய்கைகள், “புறஉரு அமைக்கும் பொறி” தொடர்பான செய்கைகள், “அரித்தற் பொறி” தொடர்பான வேலை, கொக்கோ விதைகளைத் துப்பரவு செய்தலும் வறுத்தலும், வறுத்த கொக்கோ விதைகளைச் சுத்தி செய்தல் பொறியினுள் இடுதல், பதப்படுத்தல் பொறி, “மண்டி இறுக்குபொறி” ஆகியன தொடர்பான வேலை, அதிர்வு மேசை“ ஆற்று குழாய்” தொடர்பான வேலை.

(ஆ) **இனிப்புவகை உற்பத்தி**:
சேர்ப்புத் திரவியங்களைக் கொதிக்க வைத்தல், “வெப்ப மேசைகளுக்கும்” அவற்றிலிருந்தும் “பாகுவை” அகற்றுதல் தொடர்பான வேலை, “ சூடாற்று மேசைகளுக்கும்” அவற்றிலிருக்கும் “பாகுவை” அகற்றுதல் தொடர்பாய வேலை, “பாகுஊட்டி” தொடர்பான செய்கைகள், “பாகு வைத்தல்” தடங்களிற் கொட்டுதல் தொடர்பான வேலை, “வெட்டிச் சுற்றும் பொறி” தொடர்பான வேலை, “ துண்டு செய்பொறி” தொடர்பான செய்கைகள், “இரவையாக்கு பொறி” தொடர்பான செய்கைகள், சாரம், சீனி, சாயப் பொருள் ஆகியன சேர்த்தல் உட்பட அசைத்தாச்சிகள் தொடர்பான செய்கைகள், “புறஉரு அமைக்கும் பொறி” தொடர்பான செய்கைகள், “அரித்தற் பொறி” தொடர்பான வேலை, கொக்கோ விதைகளைத் துப்பரவு செய்தலும் வறுத்தலும், வறுத்த கொக்கோ விதைகளைச் சுத்தி செய்தல் பொறியினுள் இடுதல், பதப்படுத்தல் பொறி, “மண்டி இறுக்குபொறி” ஆகியன தொடர்பான வேலை, அதிர்வு மேசை”, “ஆற்று குழாய்” தொடர்பான வேலை.

**“ஆ” வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்)**

(அ) **விசுக்கோத்து உற்பத்தி**
கலக்கும் தொட்டுகளையும் கொள்கலங்களையும் துப்பரவு செய்தல், சேர்ப்புத் திரவியங்களை நிறுத்தலும் அளத்தலும், இரசாயனப் பொருள்கள், சாரம் சாயம் ஆகியவற்றைக் கூட்டுதல், கலக்கு கருவிகளுக்கு ஊட்டுதல் என்பன உட்பட, பிசைந்த மாவைக் கலத்தல் தொடர்பான சேவைகள், வெட்டுபொறி தொடர்பான வேலை, வெட்டுதலும் புறஉரு அமைத்தலுமான தொடர்பான செய்கைகள், கனல் அடுப்பில் இடுவோரினதும் கனல் அடுப்பு உதவியாளரினதும் வேலை உட்பட விசுக்கோத்து சுடுதல்,

(ஆ) **இனிப்பு உற்பத்தி**:
பழவெல்லம், சீனி சார்வகை, கொக்கோ விதைகள், பால் மா, தாவர வெண்ணெய், ஊன்பசை (Gelatin), இரசாயனப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள் உட்பட்ட சேர்ப்புத் திரவியங்களை ஏற்றுக் கொள்ளுதல், பண்டகசாலையிடுதலும் தொடர்பானவேலை, சேர்ப்புத் திரவியங்களை நிறுத்தலும், அளத்தலும், கலத்தலும், ரொபி, சொக்கலேற்று, தித்திப்புப் பண்டங்கள் ஆகியவற்றை நிறுத்தலும், பொட்டல மாக்குதலும், தித்திப்புப் பண்டங்களைத்

தட்டங்களிற் சேர்த்தலும், வெப்ப அறையில் தித்திப்புப் பண்டங்களை உலர்த்தலும், ஊன்பசையும், சாயப் பொருளும் இடுதல், ஜுஜுப்புகளை தட்டங்களிற் சேர்த்தல், ஜுஜுப்புகளை நிறுத்தலும் பொட்டலமாக்குதலும், தித்திப்பு பண்டங்களையும், சொக்கலேற்றையும் காதிதத்திற் சுற்றுதலும், பெயர் விலாசம் ஒட்டுதலும், பொட்டலமாக்குதலும், மிட்டாய் உற்பத்தி தொடர்பான அல்லது அவ்வுற்பத்தியின் போது நிகழும் மற்றும் செய்கைகள் அல்லது நடவடிக்கைகள் எவ்வாறாயினும்.

**"இ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்):**

(அ) விசுக்கோத்து உற்பத்தி:
பிசைந்த மாவைப் பிரித்தல் தொடர்பான செய்கைகளை, சூடாற்று பரண்களுக்கும் கழுவுதலும் துப்பரவு செய்தலும், வெட்டிய விசுக்கோத்துக்களைச் சேர்த்தலும் அடுக்குதலும், விசுக்கோத்து உற்பத்தி தொடர்பான அல்லது அவ் உற்பத்தியின் போது நிகழும் மற்றும் செய்கைகள் எவ்வாறாயினும்.

(ஆ) இனிப்பு வகை உற்பத்தி:
தித்திப்புப் பண்டங்கள், சொக்கலேற்றுகள், ரொபிகள் என்பவற்றைத் தரம் பிரித்தல், பைகளுக்கு முத்திரை அச்சிடுதல், சொக்கலேற்று அச்சுகளை நிரப்புதல், சொக்கலேற்றை அச்சுகளிலிருந்து அகற்றுதல்.

### அட்டவணை I

மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்

**இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு**

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ.ச. | 2 ஆம் வகுப்பு ரூ.ச. | 3ஆம் வகுப்பு ரூ.ச. | 4ஆம் வகுப்பு ரூ.ச. | 5ஆம் வகுப்பு ரூ.ச. |
|---|---|---|---|---|---|
| **"அ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்)** | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 14,689.00 | 14,839.00 | 14,989.00 | 15,139.00 | 15,289.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 14,689.00 | 14,839.00 | 14,989.00 | 15,139.00 | 15,289.00 |
| **"ஆ" வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்)** | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 14,126.00 | 14,251.00 | 14,376.00 | 14,501.00 | 14,626.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 14,126.00 | 14,251.00 | 14,376.00 | 14,501.00 | 14,626.00 |
| **"இ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்):** | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 13,563.00 | 13,663.00 | 13,763.00 | 13,863.00 | 13,963.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 13,563.00 | 13,663.00 | 13,763.00 | 13,863.00 | 13,963.00 |

## அட்டவணை II

மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்

**இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு**

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ.ச. | 2 ஆம் வகுப்பு ரூ.ச. | 3ஆம் வகுப்பு ரூ.ச. | 4ஆம் வகுப்பு ரூ.ச. | 5ஆம் வகுப்பு ரூ.ச. |
|---|---|---|---|---|---|
| **"அ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்)** | | | | | |
| (அ)விசுக்கோத்து உற்பத்தி | 14,070.00 | 14,220.00 | 14,370.00 | 14,520.00 | 14,670.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 14,070.00 | 14,220.00 | 14,370.00 | 14,520.00 | 14,670.00 |
| **"ஆ" வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்)** | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 13,507.00 | 13,632.00 | 13,757.00 | 13,882.00 | 14,007.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 13,507.00 | 13,632.00 | 13,757.00 | 13,882.00 | 14,007.00 |
| **"இ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்):** | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 13,000.00 | 13,100.00 | 13,200.00 | 13,300.00 | 13,400.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 13,000.00 | 13,100.00 | 13,200.00 | 13,300.00 | 13,400.00 |

*10 - 286/ 7*

---

### சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்

அறிவித்தல்

தோல் பதனிடுதல், பாதணிகள் மற்றும் தோற் பொருட்கள் உற்பத்தித் தொழில்

தோல் பதனிடுதல், பாதணிகள் மற்றும் தோற் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சு.

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, செத்தெம்பர் 14.

**அட்டவணை**

தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட, 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் தேதிய 14921 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2013- ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள், அவ்வட்டவணைக்கு பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

**பாகம் II**

தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் தொழிலாளர் வகுப்புக்களுக்குரிய ஊழியர்களுக்கான நேர வேலைக்குரிய ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பள அளவு, கீழ்க் காணும் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

**தொழிலாளர் வகுப்பு**

**தோல் பதனிடுதல்**

1. **தாம் I**
   பதனிடா உரிவையைக் கழுவுதல், உரிவையைச் சுண்ணாம்பில் கொதிக்க வைத்தல், சருமத்திலிருந்து மயிரை அகற்றுதல், சருமத்திலிருந்து சதையை அகற்றுதல், இரசாயனப் பொருட்களிடல், வெளிறச்செய்தல், மென்மையாக்கல், ஊற வைத்தல், உப்பிடல், மேல்மிச்சமான எண்ணெய்யை அகற்றுதல்.

2. **தாம் II**
   பிரித்தல், சிவிறுதல், உப்பிட்ட தோல்களை அடுக்குதல், தோலை நேர்த்தியாக்குதலும், தெரிவுசெய்தலும், தரப்படுத்தலும், சேர்வையில் தோய்த்தல், எந்திரங்களை இயக்குதல், சுருக்கு நீக்கி அழுத்தமாக்குதல்

3. **தாம் III**
   மா இட்டுக் காயவைத்தல், பதனிடா உரிவையைப் பதப்படுத்தல், துப்புரவு செய்வோர், கட்டுவோர் ஆகியோரின் வேலை, மேலே குறிப்பிடப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நிகழும் மற்றும் யாதாயினும்.

**பாதணி உற்பத்தியும், பழுதுபார்த்தலும்**

1. **தாம் I**
   சேர்த்தல், மேற்தோல் செய்தல், புடவை ஒட்டுதல், எந்திரவேலை, மேற்தோல் வெட்டுதல், விளிம்பை நேர்த்தியாக்குல், அச்சில் மேற்தோல் ஒட்டுதல், அடிப்பாகங்களை அழுத்துதல், குதி செய்தல், குதி அமுக்குதல், மேற்தோல்களின் பாகங்களை வெட்டுதல், விளிம்பு அமைத்தல், அடித்தோல் வெட்டுதல்.

2. **தாம் II**
   ஏற்றுதல், சப்பாத்து அழுத்துதல், மேற்தோல் செய்தல், கச்சு அமைப்பதற்கு துவாரமிடல், தறைதல், வார்ப்பூட்டு இணைத்தல், அடித்தோல் தைத்தல், அடித்தோலை மென்மையாக்கல், மேலதிகப் பாகங்களை அகற்றுதல், கரைசல் தயாரித்தல், மேற்தோலின் முன்புறத்தை அமைத்தல், கல்லறைகளை அமைத்தல்.

3. **தாம் III**
   இறப்பர்ச் சேர்வை கலத்தல், கச்சு வெட்டுதல், மேற்தோலைத் தறைதல் சேர்வையில் தோய்த்தல், மேற்தோல் இடல், மேற்தோல் தயாரித்தல், பின் தையலுக்குச் சேர்வை பூசுதல், மினுக்குதல், செய்து முடித்தல், பெட்டிகள் வழங்கல், பெட்டிகளுக்கு முத்திரையிடல், பெட்டிகளுக்கு நாமவிலாசமிடல், துப்புரவு செய்வோர், கூட்டுவோர் ஆகியோரின் வேலை, மேலே குறிப்பிடப் பட்ட வேலை சம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நிகழும் மற்றும் செய்கை யாதாயினும்.

**தோற்பொருட்கள் உற்பத்தி செய்தல்**

1. **தரம் I**
இயந்திரத்தினாலும், கையாலும் மேற்தோல்களின் பாகங்களை வெட்டுதல், துளையிடலும் பிளவு ஆக்கலும், தறைதல், கையால் அமுக்குதல், காற்பந்துகள், கைப்பந்துகள், வலைப்பந்துகள் செய்தல், பயணப் பைகள், சாதாரண உறைகள், பணப் பைகள் செய்தல்(கையால்)

2. **தரம் II**
தெறிகள், வார்ப்பூட்டுகள், பொத்தான்கள் அமைத்தல், சித்தரித்தல், பூட்டுக்கள், இணைப்புக்கள், கைப்பிடிகள் அமைத்தல், தைத்தல், பயணப் பைகள் செய்தல் (இயந்திரத்தால்)

3. **தரம் III**
அடையாளமிடல், சேர்வையும் பசையுமிடல், காற்றுச் செலுத்துதலும் முத்திரையிடலும், மேலே குறிக்கப்பட்ட வேலை சம்பந்த மாக அல்லது வேலையின்போது நிகழும் மற்றும் வேலையாதாயினும்

**தொழில் பயிலுநர் அல்லது பயிற்சியாளர்**

மேலே கூறப்பட்ட பயிற்சியாளர் அல்லது பயிலுநர் எவரேனும் தொடர்பான பயிற்சிக் காலம் 156 வேலை நாட்களைக் கொண்ட காலப் பகுதியாக அமையுமெனக் கருதப்படல் வேண்டும்.

**அட்டவணை**

ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்

| ஊழிய ஆண்டு | தோல்பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழில் | | | |
|---|---|---|---|---|
| | தரம் 1<br>ரூ. ச. | தரம் 11<br>ரூ. ச. | தரம் 111<br>ரூ. ச. | தொழில் பயிலுநர் அல்லது பயிற்சியாளர்<br>ரூ. ச. |
| 1 ஆம் ஆண்டு | 15,750.00 | 15,120.00 | 14,500.00 | 7,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 15,900.00 | 15,245.00 | 14,600.00 | |
| 3 ஆம் ஆண்டு | 16,050.00 | 15,370.00 | 14,700.00 | |
| 4 ஆம் ஆண்டு | 16,200.00 | 15,495.00 | 14,800.00 | |
| 5 ஆம் ஆண்டு | 16,350.00 | 15,620.00 | 14,900.00 | |

10- 286/8

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

தேயிலை ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபை

தேயிலை ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, செத்தெம்பர் 14.

**அட்டவணை**

தேயிலை ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டனவும், 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் தியதிய 9436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளனவும் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டனவும் 2012 - ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அட்டவணையின் II ஆம் பகுதிக்கு பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுத்தல் வேண்டும்.

**பகுதி** II

வேலையாளர்களின் வகுப்பு:

தரம் II

மாதிரி எடுத்துக்காட்டுதல், பெட்டிகளைத் திறத்தலும் உள்ளீடுகளை வெளியே எடுத்தலும், வெறும் பெட்டிகளை நிறுத்தல், பொறியிடுவதற்கான கடதாசிகளையும் ஈயத்தாள்களையும் வெட்டுதல், உள்வரிப் பூச்சிடுதல், பெட்டிகளில் தேயிலையைப் பொதியிடுதல், ஆயத்தஞ் செய்தல், மேலே உள்வரிப் பூச்சிடுதலும் பற்றாக வைத்தலும் மூடியிடுதலும், ஆணியடித்தலும் வளையமிடுதலும், கம்பி கட்டுதலும், பழைய அடையாளங்களை வழித்தெடுத்தல், தயாரித்தல், நிறுத்தல் அத்துடன் பொதியிடுதல், கட்டுத்துண்டுகள் ஒட்டுதல் கடைச்சணற் சாக்கு உறை வெட்டுதலும் தயாரித்தலும் கடைச்சணல் நூலினால் உறையிடுதல் களஞ்சியங்களையும் வடிகால்களையும் சுத்திகரித்தலும் கூட்டுதலும் பசுந் தேயிலை வெட்டுதலும் அரித்தலும் மீள வெப்பமூட்டுதலும் பண்படுத்தலும் என்ற தொழில்களில் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட வேலையாளர்கள்.

**இடைநிலைத் தரம்**

தேயிலை நிரப்பப்பட்ட பெட்டிகளை நிறுத்தல், கையால் குவித்தல், கையால் கலத்தல் என்ற தொழில்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்கள், பெட்டி தயாரிப்போரும் பழுதுபார்ப்போரும்.

**தரம்** I

பெட்டிகளைத் தரையிறக்குதலும் தூக்குதலும், அடுக்குதலும் பெட்டிகளைக் கலவைப் பலகைக்கு தூக்கிச் செல்லுதலும் களஞ்சியத்துக்குத் தூக்கிச் சென்று மீள அடுக்குதல், பெட்டிகளை ஆயத்தஞ் செய்தல் அத்துடன் கப்பலில் கொண்டுசெல்வதற்கென ஏற்றுதலும் என்ற தொழில்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்கள்.

**காவலாளர்கள்**

ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள படிகள்

| ஊழிய ஆண்டு | தரம் II<br>ரூ. ச. | இடை நிலைத் தரம்<br>ரூ. ச. | தரம் I<br>ரூ. ச. | காவலாளர்கள்<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 14,000.00 | 14,616.00 | 15,225.00 | 14000.00 |
| 2 ஆம் ஆண்டு | 14,100.00 | 14,741.00 | 15,375.00 | 14,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 14,200.00 | 14,866.00 | 15,525.00 | 14,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 14,300.00 | 14,991.00 | 15,675.00 | 14,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 14,400.00 | 15,116.00 | 15,825.00 | 14,400.00 |
| 6 ஆம் ஆண்டு | 14,500.00 | 15,241.00 | 15,975.00 | 14,500.00 |
| 7 ஆம் ஆண்டு | 14,600.00 | 15,366.00 | 16,125.00 | 14,600.00 |
| 8 ஆம் ஆண்டு | 14,700.00 | 15,491.00 | 16,275.00 | 14,700.00 |
| 9 ஆம் ஆண்டு | 14,900.00 | 15,616.00 | 16,425.00 | 14,800.00 |
| 10 ஆம் ஆண்டு | 14,900.00 | 15,741.00 | 16,575.00 | 14,900.00 |
| 11 ஆம் ஆண்டு | 15,000.00 | 15,866.00 | 16,725.00 | 15,000.00 |
| 12 ஆம் ஆண்டு | 15,100.00 | 15,99100 | 16,875.00 | 15,100.00 |
| 13 ஆம் ஆண்டு | 15,200.00 | 16,116.00 | 17,025.00 | 15,200.00 |
| 14 ஆம் ஆண்டு | 15,300.00 | 16,241.00 | 17,175.00 | 15,300.00 |
| 15 ஆம் ஆண்டு | 15,400.00 | 16,366.00 | 17,325.00 | 15,400.00 |
| 16 ஆம் ஆண்டு | 15,500.00 | 16,491.00 | 17,475.00 | 15,500.00 |
| 17 ஆம் ஆண்டு | 15,600.00 | 16,616.00 | 17,625.00 | 15,600.00 |
| 18 ஆம் ஆண்டு | 15,700.00 | 16,741.00 | 17,775.00 | 15,700.00 |
| 19 ஆம் ஆண்டு | 15,800.00 | 16,866.00 | 17,925.00 | 15,800.00 |
| 20 ஆம் ஆண்டு | 15,900.00 | 16,991.00 | 18,075.00 | 15,900.00 |
| 21 ஆம் ஆண்டு | 16,000.00 | 17,116.00 | 18,225.00 | 16,000.00 |
| 22 ஆம் ஆண்டு | 16,100.00 | 17,241.00 | 18,375.00 | 16,100.00 |
| 23 ஆம் ஆண்டு | 16,200.00 | 17,366.00 | 18,525.00 | 16,200.00 |
| 24 ஆம் ஆண்டு | 16,300.00 | 17,491.00 | 18,675.00 | 16,300.00 |
| 25 ஆம் ஆண்டு | 16,400.00 | 17,616.00 | 18,825.00 | 16,400.00 |
| 26 ஆம் ஆண்டு | 16,500.00 | 17,741.00 | 18,975.00 | 16,500.00 |

10 - 286/9

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.